**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

| | | | |
|---|---|---|---|
| Calendar | : | **C.C.No. 194/2010** | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | | Prosecution : | **PW - 2** |
| | | Defence : | |
| | | Court : | |
| Name | : | சாந்தி | |
| Father / Husband Name | : | பிரசன்னா | |
| Village | : | 16E/2, சீனிவாசபுரம், ராஜன் தெரு, | |
| Taluk | : | தஞ்சாவூர் | |
| Caste & Religion | : | இந்து | |
| Calling | : | வீட்டுக் குடித்தனம் | |
| Age | : | 48/2022 | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.12.2022**
**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி எஸ். ஜெயந்தி, பெஞ்ச் கிளார்க் கிரேடு 3, திரு எம். செழியன்,** தட்டச்சர்

**C.C.No. 194/2010 29.12.2022 விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 12.05**

**முதல் விசாரணை:**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வீட்டுக் குடித்தனம் செய்து வருகின்றேன். அ.சா.1 ஜெயேஷ் குமார் என்பவரை எனக்கு தெரியாது. 1ம் எதிரி துளசி தாசன் என்பவரை எனக்கு தெரியும், வழக்கின் மற்ற எதிரிகளை எனக்கு தெரியாது. கடந்த 2003 ம் ஆண்டு தினசரி நாளிதழில் Homeo கல்லூரியின் வேலை விளம்பரத்தை பார்த்துவிட்டு தஞ்சாவூர் கமலா தியேட்டர் அருகில் உள்ள ஆபிரகாம் பண்டிதர் தெருவில் உள்ள கல்லூரி சென்று கல்லூரியில் துளசிதாசன் என்பவரை சந்தித்தேன். நான் அவரிடம் எனது Resume கொடுத்தேன். அவர் அதை பார்த்துவிட்டு என்னிடம் டைப்பிங் தெரியுமா என்று கேட்டார், தெரியும் என கூறினேன். பின்னர் 2 நாட்கள் கழித்து மீண்டும் வருமாறு கூறினார். பின்னர்

2 நாட்கள் கழித்து அந்த அலுவலகம் சென்று பார்த்தேன். துளசிதாசன் என்னை வேலைக்கு அமர்த்தினார். எனக்கு ரூ.800/- சம்பளம் என்று கூறினார். என்னிடம் புத்தகம் ஒன்றை கொடுத்தார், அதில் முகவரிகள் நிறைய இருந்தன. அவற்றை நான் ஒரு தாளில் தட்டச்சு செய்து கொடுத்தேன். அலுவலகத்திற்கு அறிவிப்புகள் வரும், அவற்றில் மேற்படி விலாசங்களை ஒட்டி அனுப்ப வேண்டும் என்று துளசிதாசன் என்னிடம் கூறினார். இரண்டு மூன்று நபர்கள் அலுவலகத்திற்கு வருவார்கள். துளசிதாசன் அவர்களை சந்திப்பார்கள். தபால்களை அனுப்புவதற்காக பெண்கள் வந்து செல்வார்கள். நான் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது போலீசார் வந்தார்கள். துளசிதாசன் அவர்களை விசாரணை செய்து போலீசார் அழைத்துச் சென்றுவிட்டார்கள். அலுவலகத்தில் இரண்டு மூன்று நபர்கள் வேலையில் இருந்தார்கள். நான் போலீசாரிடம் எந்த ஆவணமும் எடுத்துக் கொடுக்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள். என்னை காவல் நிலையம் வருமாறு கூறினார்கள். போலீசார் என்னை விசாரித்தபோது துளசிதாசன் போலி டாக்டர் என தெரிய வந்தது. மற்ற மருத்துவரை பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணங்களை நான் போலீசாரிடம் ஒப்படைக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது. சாட்சியை மாவட்ட குற்றப்பிரிவு தலைமைக் காவலர் 1506 திருமதி சித்ரா அவர்கள், நீதிமன்றத்தில் அடையாளம் காண்பித்தார்.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை** :

கடந்த 15.03.2003 ம் தேதி ஆபிரகா ம் பண்டிதர் தெருவில் உள்ள டாக்டர் துளசிதாசன் நடத்தி வந்த The Thanjavur Electropathi Medical College என்ற பெயரில் உள்ள மருத்துவக் கல்லூரியில் நான் வேலைக்கு சேர்ந்தேன் என்றும், அந்த சமயத்தில் துளசிதாசன் அவ்வப்போது கேரளா, சேலம், வேலும், மெட்ராஸ் ஆகிய இடங்களுக்கு சென்று வருவார் என்று சொன்னால் சரியல்ல. துளசிதாசன் அவரது அலுவலகத்தில் விதவிதமான பதவிகளுக்கு தனித்தனியே ரப் பர் ஸ்டாம்ப் சீல் வைத்து போட்டு வருவார் என்று சொன்னால் சரியல்ல. துளசிதாசன் தஞ்சாவூர்

**C.C.No. 194/2010    29.12.2022**

மாரியம்மன் கோவில் ரோட்டில் பொன்னுச்சாமி நகரில் The Thanjavur Electropathi Medical College என்ற பெயரில் ஆரம்பித்து நடத்தி வந்தார் என்றால் சரியல்ல. அந்த கல்லூரியில் துளசிதாசன் முதல்வராகவும், நான் வேலைக்கு வந்தபோது கல்லூரியில் படிப்பதற்காக மாணவர்கள் சேர்ந்து கொண்டு இருந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. மருத்துவர் தியாகராஜன் அந்த கல்லூரியில் டீன் என்றும், இரத்த பரிசோதனை நிலையம் நடத்தி வந்த R.B. நற்பவி என்பவர் மேற்படி கல்லூரியின் இரசாயண கூடத்திற்கு தலைவர் என்று சொன்னால் சரியல்ல. மருத்துவர் பொற்செழியன், மேற்படி கல்லூரியின் பதிவாளர் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி கல்லூரியில் மருத்துவர் தியாகராஜன் அவ்வப்போது வந்து ஆலோசனை வழங்குவார் என்று சொன்னால் சரியல்ல. நற்பவியும் அவ்வப்போது கல்லூரிக்கு வந்து செல்வார் என்று சொன்னால் சரியல்ல. மருத்துவர் துளசிதாசன் போலீயாக மருத்துவக் கல்லூரி நடத்தியதாகவும், இந்த கல்லூரியில் மருத்துவ படிப்பு படித்ததாக போலீயாக சான்றிதழ் கொடுத்ததாகவும், 20.05.2003 ம் தேதி மாவட்ட குற்றப் பிரிவு போலீசார் துளசிதாசனை கைது செய்தார்கள் என்றும், அலுவலகத்தில் இருந்த பதிவேடுகளை கைப்பற்றினார்கள் என்று சொன்னால் சரியல்ல. பின்னர் 21.05.2003 ம் தேதி நான் கல்லூரியில் அலுவலகத்திற்கு வந்தபோது மாவட்ட குற்றப்பிரிவு ஆய்வாளர் என்னை விசாரித்து அலுவலக கணினி அருகில் இருந்த சான்றிதழ்களையும், கல்லூரி சம்மந்தப்பட்ட ஆவணங்களையும், புகைபடங்களையும் வழக்கு நடவடிக்கைக்காக நான் ஆஜர் செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி கல்லூரி அலுவலகத்திற்கு கணினி இயக்குவதற்காக கணேசன் என்பவர் வேலை பார்த்து வந்தார் என்றால் சரியல்ல. கணேசன் அலுவலகத்திற்கு சம்மந்தமாக பணத்தை வங்கியில் செலுத்தி வந்தார் என்று சொன்னால் சரியல்ல. வங்கியில் இருந்து பணத்தை எடுத்து வந்து துளசிதாசனிடம் கொடுப்பார் என்று சொன்னால் சரியல்ல. துளசிதாசனை போலீசார் கைது செய்வதற்கு 15 நாட்கள் முன்பாகவே கணேசன் என்பவர் வேலையில் இருந்து விலகிவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி கல்லூரி சம்மந்தப்பட்ட ஆவணங்களை போலீசாரிடம் ஆஜர் செய்தபோது போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்சமயம் எதிரிகளுக்கு

**C.C.No. 194/2010    29.12.2022**

பயந்து எதிரிகளுக்கு  ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும்  பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

2003 ம் ஆண்டு துளசிதாசன்  இறந்து விட்டார்  என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. என்னிடம் துளசிதாசன் எந்த ஆவணத்தை தட்டச்சு செய்ய கொடுத்தார் என்றால்  சில முகவரிகளை தட்டச்சு செய்ய கொடுத்தார். அதை மட்டும்தான் நான் தட்டச்சு செய்வேன்.  போலீசார் என்னிடம் எந்த தாளிலும் கையெழுத்து பெறவில்லை என்று சொன்னால் சரிதான்.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு. சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர் எண்-I,
தஞ்சாவூர்.